**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், ஒருதனி நபரைக் கொலை செய்தாலேயே, அந்தக் குற்றம் செய்தவருக்குத் தூக்குத் தண்டனை அளிக்கக்கூடிய அளவுக்குச் சட்டம் இருக்கிறது. ஆனால், ஒரு அரசைக் கொலை செய்யக்கூடிய அளவுக்கு இவ்வளவு மோசமான ஒரு போக்கு இருக்கும்போது, அதற்குத் தகுந்த தண்டனை அளிக்க அந்தச் சட்டத்தைத் திருத்தினாலொழிய ஒன்றுமே செய்ய முடியாது என்று சொல்லக்கூடிய இந்த நேரத்தில், இதுபோன்று மோசமான ஒரு போக்கில் ஈடுபடக்கூடியவர்களுக்குச் சாதகமான முறையில்தானே அந்தச் சட்டம் இருக்கிறது ? ஆகவே, அதை மாற்றி, திருத்தியமைக்கும்படி நமது சர்க்கார் சார்பிலே அதை வற்புறுத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** தண்டனையைக் கடுமையாக்க சட்டத்தைத் திருத்தலாமா என்கிற யோசனையும் பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 513, 514 ஆகிய எண்களுள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### அரசு மருத்துவ மனைகள்.

* 515 **வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை அரசாங்க மருத்துவ மனையிலுள்ள "நடமாடும் கண் வைத்திய சாலை"யின் நிர்வாகப் பொறுப்பு யாரிடம் உள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மதுரை அரசாங்க மருத்துவ மனையிலுள்ள "நடமாடும் கண் வைத்தியசாலையின்" நிர்வாகப் பொறுப்பு அம்மருத்துவ மனையின் முதல்வரிடம் (Dean) இருக்கிறது.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இந்த நடமாடும் கண் வைத்தியசாலைக்கென அமெரிக்க அரசு ஏதாவது உதவி செய்கிறதா ? ஆம் எனில், ஆண்டொன்றுக்கு எவ்வளவு உதவி அளிக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படி அமெரிக்க அரசு ஒன்றும் நமக்கு உதவி செய்ய முன்வரவில்லை.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, நடமாடும் கண் மருத்துவ மனை மூலம் பல கிராமங்களுக்கும் சென்று நூற்றுக் கணக்கானவர்களுக்கு கண் ஆபரேஷன் செய்யப்படுகிறது. அப்படி ஆபரேஷன் செய்துகொண்டவர்களில் பலர் வசதியாக சௌகரியம் அடைந்து வருகிறார்கள். சில பேர்களுக்குக் கண் சிகிச்சையை தொடர்ந்து கவனிப்பதற்கு ஆள் இல்லாத காரணத்தால் கண் கெட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட கேஸ்கள் இருந்தால், அதைத்தொடர்ந்து பராமரிப்பதற்கு என்ன ஏற்பாடு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இந்த நடமாடும் கண் வைத்தியசாலைகள் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளோடு இணைக்கப்பட்டு இருக்கின்றன. அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள் எப்படிக் கண்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கும், கண்களில் வேறு கோளாறுகள் வர முடியாத அளவுக்கும், தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளுவதற்கும் பல பிரச்சாரங்கள் செய்து விளக்கப்பட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அறுவை சிகிச்சைக்குப் பிறகு, நல்ல "ஃபாலோ அப்" இருப்பதற்கு "ஐ காம்ப்ஸ்" இருக்கின்றன. மதுரையில் நான்கு "ஐ காம்ப்ஸ்" நிறுவப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு "காம்ப்" புக்கும் ஐயாயிரம் ரூபாய் செலவு செய்து, அறுவை சிகிச்சைக்குப் பிறகும் பராமரிக்கப்படும் அளவுக்கு வசதிகள் செய்துகொண்டு வருகிறார்கள்.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** நடமாடும் கண் வைத்தியசாலை மதுரை நகரத்தைத் தவிர வேறு எந்த எந்த நகரங்களிலே இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** மதுரையிலும் சென்னையிலும் தான் இருக்கின்றன.

**THIRU K. S. KOTHANDARAMIAH :** Sir, Dr. Modi, a great eye doctor, is doing philanthropic work in other areas of the State and will the Government be pleased to bring him here and make use of his services for the people who are suffering from eye disease?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அப்படிப்பட்ட உத்தேசம் ஏதும் இல்லை.

**திரு. சு. துரைசாமி:** அமைச்சர் அவர்கள், சென்னையிலும், மதுரையிலும் மட்டும் தான் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். கோயமுத்தூர் நகரம் மிகப் பெரிய நகரமாக வளர்ந்து வருவதால், கோயமுத்தூரிலும் விரைவில் அப்படிப்பட்ட நடமாடும் கண் வைத்தியசாலையை வைக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப்பொழுது எந்தச் செயற்குறிப்பும் கோயமுத்தூர் பற்றி இல்லை.

**திரு. கே. பி. எஸ். மணி:** ஐயா, பட்டியரிசித் திட்டமும் சென்னை போன்ற நகரத்தில் இருக்கிறது. நடமாடும் கண் வைத்தியசாலையும் சென்னை போன்ற நகரத்தில் இருக்கிறது. கிராமத்திலிருக்கும் மக்களுக்கும் இத்தகைய கண் வைத்திய வசதி ஏற்படுவதற்காக மூவிங்யூனிட் போன்று, அவர்களுக்கு டெண்ட், மற்றவைகள் கொடுத்து, ஜில்லாதோறும் ஒவ்வொரு வாரம் வந்திருந்து அறுவை சிகிச்சை முதலியவைகளைச் செய்ய அரசு முன்வருமா ? இப்பொழுது செய்து கொண்டிருக்கிற இந்த நடைமுறைக்கு என்ன செலவு ஆகிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அந்த நிலையங்கள் இரண்டு மாவட்டங்களுக்கு மாத்திரம்தான் என்று இருந்தாலும், நடமாடும் மருத்துவ நிலையங்கள் பல மாவட்டங்களுக்கும் செல்லுகின்றன. எனவே, எல்லா மாவட்டங்களிலும் இருக்கும் அத்தியாவசியமான இடங்களுக்குச் சென்று சிகிச்சை கொடுத்துக் கொண்டுதான் வருகிறது. செலவினங்களைப் பொறுத்த வரையில், நடமாடும் மோட்டார் வண்டிக்கு ஆகும் பெட்ரோல் செலவு ரூ. 9,200 ஆகும். ஒவ்வொரு நிலையத்திற்கும் இரண்டு மோட்டார் வாகனங்கள் இருக்கின்றன. அவற்றுக்குச் செலவு ரூ. 40,000. கூடார அமைப்புக்காக ரூ. 10,000 செலவாகிறது. பிரசாரச் செலவு ரூ. 20,000 கண் வைத்திய சிகிச்சைக்குத் தரப்படுகிற கருவிகளுக்காக ரூ. 12,000, செலவாகிறது. "கராஜ்" கட்டுவதற்கும், வாகன வசதிகளுக்கும் ரூ. 8,000 செலவாகிறது. ஆக, சுமார் ஒரு லட்ச ரூபாய் அதற்காகச் செலவழிக்கப் படுகிறது.

***516 வினா.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவ மனையிலுள்ள எக்ஸ்ரே பிலிம் (Film) அதற்கு தேவையான பிலிம் இல்லாத காரணத்தால் தற்போது செயலற்று இருந்து வருகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** அந்த மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் இருக்கும் எக்ஸ்ரே சாதனங்களை இயக்குவதற்கு உள்ளவர், 25 மைலுக்கு அப்பாலுள்ள கும்பகோணத்திலிருந்து வரவேண்டியிருப்பதால், வாரத்திற்கு இரண்டு மூன்று தடவைதான் வரக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றி, மாயவரத்திலுள்ள அந்த மருத்துவ மனையிலேயே ஒருவரை நியமித்து, அங்குள்ள மக்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா ?